# தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

பொதுப்பணிகளில் நியமனம் செய்ய தமிழ்நாட்டிலுள்ள திறந்தவெளி பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் பட்டயப்படிப்பு, பட்டப் படிப்பு மற்றும் முதுநிலைப் பட்டப் படிப்புகளை முறையாக வழங்கப்படும் (Regular Stream) பட்டயப்படிப்பு, பட்டப்படிப்பு மற்றும் முதுநிலை பட்டப்படிப்பிற்கு நிகராக கருதி அங்கீகாரம் செய்து ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (ஆர்) துறை**

அ.ஆ. (நிலை) எண். 180

நாள்: 11.9.2000
விக்கிரம ஆவணி 27,
திருவள்ளுவர் ஆண்டு 2031

படிக்கப்பட்டது

1. தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி துணை பொது மேலாளரது கடித எண். 31835/98-99 நாள் 2.7.99.
2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலரது க.எண். 9931/RND-F1/99 நாள் 24.5.20υ0.

**ஆணை:**

தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி துணைப் பொது மேலாளர் மதுரை காமராஜர் மற்றும் அண்ணாமலை திறந்தவெளி பல்கலைக் கழகங்களால் வழங்கப்படும் பட்டப்படிப்பு / மற்றும் முதுநிலைப் பட்டப்படிப்பு ஆகியவற்றை முறையாக வழங்கப்படும் பட்டப்படிப்பு/முதுநிலைப் பட்டடிப்படிப்பு ஆகியவற்றிற்கு நிகராக கருதி பொதுப் பணிகளில் வேலை வாய்ப்பிற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது என தெரிவித்து, தமிழ்நாட்டிலுள்ள இதர திறந்தவெளி, பல்கலைக்கழகங்களால் (அதாவது சென்னை பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் போன்ற பல்கலைக்கழகங்களால்) வழங்கப்படும் பட்டப்படிப்பு, முதுநிலைப் பட்டப்படிப்புகளை முறையாக வழங்கப்படும் பட்டப்படிப்பு/முதுநிலை பட்டப்படிப்பு ஆகியவற்றிற்கு நிகராக கருதி பொதுப்பணிகளில் வேலை வாய்ப்பிற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளதா என அரசைக் கேட்டிருந்கார்.

2. 20.12.93 நாளிட்ட பணியாளர் மற்றும் நாவாகச் சீர்திருத்தத் துறையின் அரசாணை நிலை எண்.441-ல் ஆணை வெளியிட்டவாறு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவரை தலைமையாக கொண்டு இதற்கென அமைக்கப்பட்ட குழுவின் முன்னர், தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியின் துணை பொது மேலாளரது கோரிக்கை பரிந்துரைக்காக வைக்கப்பட்டது.

3. 3.5.2000 அன்று நடந்த குழுக் கூட்டத்தில் இப்பொருள் விவாதிக்கப்பட்டு, தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களால் திறந்தவெளி பல்கலைக்கழக முறை மூலம் வழங்கப்படும் பட்டயப்படிப்பு, பட்டப்படிப்பு மற்றும் முதுநிலைப் பட்டப்படிப்புகளை அப்பல்கலைக்கழகத்தால் முறையாக வழங்கப்படும் பட்டயப்படிப்பு, பட்டப்படிப்பு, முதுநிலை பட்டப்படிப்பு ஆகியவற்றிற்கு நிகராக கருதி அங்கீகரிக்கலாம் என குழு அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

4. குழுவின் பரிந்துரைகளை அரசு தீவிர பரிசீலனைக்குப் பின் ஏற்றுக் கொள்ள முடிவெடுத்துள்ளது. அவ்வாறே, தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழக மான்ய குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களால் திறந்தவெளி பல்கலைக்கழக முறை மூலம் வழங்கப்படும் பட்டயப்படிப்பு, பட்டப்படிப்பு, மற்றும் முதுநிலை பட்டயப்படிப்புகளை அப்பல்கலைக்கழகங்களால் முறையாக (Regular Stream) வழங்கப்படும் பட்டயப்படிப்பு, பட்டப்படிப்பு, மற்றும் முதுநிலைப் பட்டப்படிப்பு ஆகியவற்றிற்கு சமமாக கருதி பொதுப் பணிகளில் வேலை வாய்ப்பிற்கு அங்கீகாரம் அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சை. முனீர் ஹோதா,
அரசுச் செயலர்.